அதனைக் கீழ்க்கண்ட விளக்கக் குறிப்புகளின் அடிப்படையில் திருத்தி ஏற்றுக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

திரைப்படம் எடுக்க ரூ. 3 லட்சம் செலவழிக்கப்பட்டது என்பது ஏழு நாட்கள் நடைபெற்ற மாநாட்டோடு தொடர்புடைய அனைத்து நிகழ்ச்சிகளையும் செய்தித் திரைப்படம் (டாகுமெண்டரி) எடுக்க செலவழிக்கப்பட்ட தொகையாகும்.

'குமரிக் கண்டம்' திரைப்படத்தை சினிமாஸ்கோப் பிரதி தமிழில் 1-ம், சினிமாஸ்கோப் பிரதி ஆங்கிலத்தில் 1-ம், 35 எம். எம். கலர் பிரதிகள் தமிழில் 7-ம், 35 எம். எம். கலர் பிரதிகள் ஆங்கிலத்தில் 2-ம் ஆக 11 பிரதிகளாக எடுக்க ஆன மொத்த செலவு ரூ. 9.50 இலட்சமாகும்.

*டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, உங்களுடைய நினைவிற்கும், அவை முன்னவர் அவர்களின் கவனத்திற்கும் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். இதே அவையில், நம்முடைய அவை முன்னவர் அவர்கள் அமைச்சராகப் பொறுப்பேற்று இருந்தபோது, அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, விவசாயிகள் பிரச்னை குறித்து அண்ணா அவர்கள் முதல் நாள் ஒரு தகவல் சொல்லி, மறு நாள் முதலமைச்சர் அண்ணா அவர்கள் அந்தத் தகவலைத் திருத்தி இந்த அவையில் அறிக்கை வைக்கின்ற நேரத்தில், முதல் நாள் சொன்ன தகவலுக்காக வருந்துகிறேன் என்று சொல்லி வருத்தம் தெரிவித்தார்கள். ஆனால், இங்கே இப்படிப்பட்ட பெரிய தவறைச் செய்து விட்டு, துரைமுருகன் அவர்கள் சுட்டிக்காட்டியபோது அவரை கேலியும், கிண்டலும் செய்து விட்டு, சொல்வது தவறு என்று துரைமுருகனை இழித்தும் பழித்தும் பேசிவிட்டு, இப்போது திருத்தம் கொடுக்கிற நேரத்தில் தவறுக்காக வருந்துகிறேன் என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடாமல் இருப்பது உள்ளபடியே வருந்தத்தக்கதாய் உள்ளது.

(ஆ) முல்லையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுவது—நீர்ப்பாசனத்துறை அமைச்சர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 107-ன் கீழ் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இப்பேரவையில் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 7 ஆம் நாள் அன்று, கன்னியாகுமரி மாவட்டத்தில் முல்லையாற்றின் குறுக்கே பள்ளிக்கூடம் என்னுமிடத்தில் நீர்த்தேக்கம் கட்டுவது சம்பந்தமான கேள்விக்கு பதிலளிக்கையில் திரு. டி. மணி அவர்களின் துணைக் கேள்விக்கு கீழ்க்கண்டவாறு பதில் அளிக்கப்பட்டது.

1981 பிப்ரவரி 27] [திரு. கே. இராஜா முகமது]

"சீப் இன்ஜினியர் இன்வெஸ்டிகேஷன் அவருடைய பணிகளை முடித்து இங்கேஅனுப்பியிருக்கிறார். இங்கே, நம்முடைய துறையோடு கலந்து பேசி, அதற்கு நிதி ஒதுக்கீடு செய்வது, எந்த ஆண்டிலே செய்வது என்கின்ற அளவிலேதான் இந்தக் கருத்துரு இருக்கிறது. எனவே, கிட்டத்தட்ட 60 சதவிதத்திற்கான அடிப்படை பணிகள் முடிந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவதைப் போல் அடுத்த நிதி ஆண்டிலே, நாம் மானியக் கோரிக்கையை வைக்கும்போது, சாதனைப் பட்டியலிலே இதுவும் இடம் பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

"மேற்சொன்ன திட்டம் தற்சமயம் தலைமைப் பொறியாளரின் (ஆய்வு) ஆய்வில் உள்ளது. தலைமைப் பொறியாளரிடமிருந்து (ஆய்வு) திட்ட அறிக்கை கிடைத்ததும் அதனை அரசு ஆராயும்" என்பதுதான் சரியான நிலைமை எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் கேள்வி எழுப்பவில்லை. இப்படிப்பட்ட தவறான தகவலை அமைச்சருக்குக் கொடுத்தவர் யார்? அவர்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? 60 சதவிதப் பணிகள் முடிந்து விட்டது என்று அவர்கள் விவரமான வகையில் அன்றைக்குப் பதில் அளித்து இருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த அளவிற்குத் தவறான தகவல்களைத் தந்த அரசு அலுவலர் யார்? அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? அப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டால்தான் இப்படிப்பட்ட தவறுகள் நிகழாமல் இருக்கும். இப்படிப்பட்ட தவறுகள் திரும்ப நிகழாமல் இருக்க அமைச்சர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) ஏற்பட்டு இருக்கக்கூடிய தவறு மிகச் சாதாரணமான தவறு அல்ல. அவையில் சொல்லக்கூடிய செய்திகள் பெரும்பாலான அளவிற்கு உண்மைக்கு மாறான செய்திகளாக அமைச்சர் அவர்களுக்குத் தரப்பட்ட காரணத்தால்தான் இங்கே அதை அவர் சொல்ல நேர்ந்து இருக்கிறது. இதில் இருந்து அரசாங்கம் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே நான் அளித்த அறிக்கை துணைக்கேள்விக்கு பதில் சொன்னதை ஒட்டிய ஒரு திருத்தம்தான். இதிலே துறை எந்தத் தவறையும் செய்யவில்லை. (குறுக்கீடு) என்னுடைய கருத்தை முழுமையாகச் சொல்வதற்கு முன்பே நீங்கள் மகிழ்ச்சி அடைய விரும்பினால் நான் அதிலே குறுக்கே நிற்க விரும்பவில்லை. "அங்கே இன்வெஸ்டிகேஷன் முடிந்து விட்டது. அதற்கு எவ்வளவு பணம் ஒதுக்க வேண்டும், எந்த ஆண்டில் எடுத்துக் கொள்வது" என்ற அளவில் தலைமைப் பொறியாளர்

(இர்ரிகேஷன்) அவர்களிடமிருந்து வந்து விட்டதாகக் கருதி நான் கேள்விக்கு பதில் சொன்னேன். இன்வெஸ்டிகேஷன் இப்போது தான் முடிந்து இருக்கிறது. இனிமேல்தான் அதுகுறித்து செய்யப்போகிறோம் என்ற கருத்தை ஒட்டி 60 சதவிகித அடிப் படைப் பணிகள் முடிந்து விட்டதற்கான வாய்ப்பு இருக்கிறது என்ற எண்ணத்திலே சொல்லிவிட்டேனே தவிர, பெரிய தவறு ஒன்றும் நடந்துவிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

[முற்பகல் 11-10]

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தவறை தவ றாகச் சொல்லிவிட்டு, அதற்குத் திருத்தம் கொடுத்தார். ஆனால், இப்போது தவறே நடக்கவில்லை என்று சொல்கிறார். எதை நாங்கள் ஏற்றுக்கொள்ள?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, ஏதோ பெரிய தவறு நடந்துவிட்டதைப்போல பேராசிரியர் அவர் கள் தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட தவறு ஒன்றும் நடந்து விடவில்லை. ஏற்கெனவே பதில் சொல்லும்போது இன்வெஸ்டி கேஷன் நடந்து முடிந்துவிட்டது என்று சொன்னேன். இன் வெஸ்டிகேஷன் இன்னும் முடியவில்லை என்று தெரிய வந்ததால் அதற்குத் திருத்தம் கொடுக்கப்பட்டது. சீப் என்சினீயர் (இன் வெஸ்டிகேஷன்) அவர்களிடமிருந்து இன்வெஸ்டிகேஷன் முடிந்து ரிப்போர்ட் சீப் எஞ்சினீயர் (இரிகேஷன்)க்கு வந்துவிட்டது என்று நினைத்து முன்னால் பதில் சொன்னேன், ஆனால், ரிப்போர்ட் வரவில்லை என்பதால் இப்போது திருத்தம் கொடுக்கப்பட்டது. குற்றம், குறை இரண்டுக்கும் நிரம்ப வேறுபாடு உண்டு.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்த அவையின் நன்மைக்காக, சபாநாயகராகிய தாங்கள் அவர்களுடைய பதில் முழுவதையும் படித்துப் பார்த்து, அவையின் எதிர்கால நட வடிக்கைகளில் இப்படி ஏற்படாமலிருக்க வழிவகை செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முழுவதையும் படித்துப் பார்த்துவிட்டு, பின்னால் என்னுடைய தீர்ப்பை அறிவிக்கிறேன்.

6. கவன ஈர்ப்புகள்.

(அ) திருவில்லிபுத்தூர் தாலுகா வத்திராயிருப்பு கிராம தீ விபத்து.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, "திரு வில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பில் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2 ஆம் தேதி அன்று தீ பிடித்ததால் 207